**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**

**DINDIGUL.**

**STC.No. 2032/2024**

**Prosecution Witness : 6**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : வேல்மணி | **Caste** | : |
| **Father's Name** | : கிருஷ்ணன் | **Calling** | : தலைமை காவலர், மதுவிலக்கு அமலாக்க பிரிவு காவல்நிலையம் |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : **48** |
| | | **Dated** | : **15.09.2025** |

**15.09.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–9 திரு. வேல்மணி ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 6 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜர்**

1. நான் தற்போது திண்டுக்கல் மதுவிலக்க அமலாக்க பிரிவில் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு திண்டுக்கல் தாலுகா காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 10.05.2024ம் தேதி இரவு 21.30 மணியளவில் நிலைய அலுவலில் இருந்தபோது திண்டுக்கல் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று, அங்கு சென்று சிகிச்சையில் இருந்த பாலகிருஷ்ணன் என்பவரை விசாரிக்கும் போது அவர் மயக்கநிலையில் இருந்ததால் மறுநாள் 11.05.2024ம் தேதி அவரை மீண்டும் சென்று விசாரித்து அவர் புகார் வாக்குமூலத்தை பெற்று அன்றே வாக்குமூலத்தை பெற்று மதியம் 13.00 மணிக்கு நிலையம் வந்து குற்ற எண்.323/2024 u/s 279, 337 IPC வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையின் புகார் வாக்குமூலத்தையும், கனம் நடுவர் நீதிமன்றம்

எண்.1 க்கு அனுப்பி வைத்தேன். வழக்கு கோப்பை சார்பு ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். சார்பு ஆய்வாளர் இந்த வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார். முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

வாக்குமூலம் வாங்கியது ஒரு நாள் காலதாமதம் என்றால் சரிதான். புகார்தாரர் மயக்கநிலையில் இருந்ததால் காலதாமதம். நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் வாக்குமூலம் பெற செல்லவில்லை என்றாலும். புகார்தாரர் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும், பின்னிட்டு காவல்நிலையம் சென்று தயார் செய்யபட்டது என்றாலும் சரியல்ல.

Taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2025.09.15 17:42:54 +0530

Judicial Magistrate No.I

Dindigul.